# முதலீட்டுக்கான முதன்மை வகாலா உடன்படிக்கை

இந்த முதன்மை வகாலா உடன்படிக்கையானது ……………… ஆந் தேதியன்று (இதனகத்துப்பின்னர் "முவாக்கில் எனக் குறிப்பீடு செய்யப்படும்) …………………. என்போரினாலும், என்பவருக்கும் இடையேயும் (பெயர்), இலங்கைச் சட்டங்களின்கீழ் உரிய முறையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பெனி ஒன்றாக உள்ளதும் மற்றும் பதிவிலக்கம் PQ27 இனைக் கொண்டதும் இல.40 நவம் மாவத்தை, கொழும்பு 2இல் அமைந்துள்ள அதனது பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தைக் கொண்டுள்ளதும் (இதனகத்துப்பின்னர் "வக்கீல் எனக் குறிப்பீடு செய்யப்படும்) நஷனல் டிவலப்மென்ட் பீஎல்சீக்கு இடையேயும் செய்யப்பட்டு நிறைவேற்றப்படுகின்றது இது பின்வருமாறு இத்தால் உடன்பட்டுக்கொள்ளப்படும்.

## 1. முன்னுரை

உடன்படிக்கையில் தரப்பட்ட நியதி நிபந்தனைகளைப் பின்பற்றியும் இஸ்லாமிய ஷரியாவின் விதிகளுக்கும் கோட்பாடுகளுக்கும் இணங்கியொழுகவும் வக்கீலின் திறைசேரி நிதிகளின் தொகுப்புகளின் ஊடாகவும் அதன் பாகமாகவும் ஷரியாவின் இணங்கி ஒழுகுகைக் கொடுக்கல் வாங்கல்களில் முவாக்கிலினது நிதிகளை முதலீடு செய்வது தொடர்பில் முவாக்கிலின் முகவராக இருப்பதற்கென முவாக்கில் வக்கீலை நியமிப்பதற்கு விரும்புகின்றார் ஆதலாலும்

## 2. வகாலா நியதிகள் மற்றும் நிபந்தனைகள்

2.1 முவாக்கில் தனது நிதியங்களை முதலீடு செய்வதற்காக அதனது முகவராக வக்கீலை நியமிக்கின்றது. வக்கீல் முவாக்கிலின் சார்பாகவும் அவரது கணக்கு சார்பாகவும் ஷரியா இணக்கமான கொடுக்கல் வாங்கல்களைச் செய்துகொள்வதற்கு இத்தால் அதிகாரமளிக்கப்படுகின்றது.

2.2 வக்கீலினது வேண்டுமென்ற தவறான நடத்தை அல்லது முழுமொத்த அலட்சியத்தால் ஏற்படும் ஆபத்துக்களைத் தவிர முவாக்கிலின் முகவராக வக்கீலின் செயல்களுடன் இணைந்த அனைத்து ஆபத்துக்களையும் முதல்வாரன முவாக்கில் பொறுப்பேற்க வேண்டும்.

2.3 இதன்கீழான அதனது சேவைகளை வழங்குவதற்கு வக்கீல் பின்வருவனவற்றிற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

(அ) முனைவு ஒன்றில் குறித்துரைக்கப்பட்டவாறான வகாலா கட்டணம்.

(ஆ) முனைவிற்கிணங்க போதுமான இலாபம் ஈட்டப்பட்டிருந்தால் ஊக்குவிப்புக் கட்டணம்.

2.4 முதலீட்டு விண்ணப்பத்தில்/விண்ணப்பங்களில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள மற்றும் உடன்பட்டுக்கொள்ளப்பட்ட காலத்தின்படி வகாலா முதலீடு/முதலீடுகள் முதலீடு செய்யப்படும். இருப்பினும் வகாலா முதலீடு/முதலீடுகள் ஒவ்வொரு காலப்பகுதியின் முடிவிலும், அதே காலப்பகுதி ஒன்றுக்காக, முரணாக வாடிக்கையாளர் சம்மதம் முவாக்கிலின் (வாடிக்கையாளர்) மூலம் வக்கீலுக்கு (வங்கி) வழங்கப்பட்டிருந்தாலொழிய அத்தகைய மீள் முதலீட்டுக்காலத்தில் நிலவுகின்ற நியதிகள் மற்றும் நிபந்தனைகளை அடிப்படையாகக் கொண்டு தன்னியக்க ரீதியில் மீள்முதலீடு செய்யப்படும்.

## 3. வகாலா கொடுக்கல் வாங்கலை நடைமுறைப்படுத்தல்

3.1 முவாக்கிலில் முனைவில் குறித்துரைக்கப்பட்டவாறு இயைபான முதலீட்டுத் தேதியன்று வகாலா தொகையைச் செலுத்துதல் வேண்டும்.

3.2 வாசகம் 3.1 உடன் முவாக்கிலின் உரிய இணங்குகைக்கு அமைய முவாக்கிலின் அதிகாரமளிக்கப்பட்ட கையொப்பமிடுபவர்களால் வேறு வகையில் அறிவுறுத்தப்பட்டிருந்தாலொழிய முவாக்கிலின் கணக்கிற்கு முதிர்வுத் தேதியன்று (பிடித்துவைக்கும் வரிகள் போன்ற ஏற்புடையற்பாலதான சட்டத்திற்கு இணங்க பிடித்துவைக்கப்பட்ட எந்தவொரு தொகையும் கழிய) வகாலா கொடுக்கல் வாங்கலின் முதிர்வு வருவாயை கைமாற்றுவதற்கு வக்கீல் உறுதியளிக்கின்றது. அத்தகைய கைமாற்றத்தின்போது, வகாலா கொடுக்கல் வாங்கல் முடிவுறுத்தப்படும்.

3.3 ஐயத்தைத் தவிர்ப்பதற்காக வகாலா தொகையைத் திருப்பிச் செலுத்துவதற்கோ அல்லது முனைவில் விலை கூறப்பட்டவாறான தொகையில் எதிர்நோக்கப்படும் இலாபத்தை செலுத்துவதற்கோ வக்கீல் எந்த வடிவத்திலும் உத்தரவாதம் அளிக்காது என்பதுடன் ஈட்டப்பட்ட வகாலா இலாபம் முதலாம் அட்டவணையிலுள்ள முனைவில் விலை கூறப்பட்ட தொகையிலிருந்து வேறுபடலாம். முவாக்கில் மட்டுமே முதிர்வு வருவாய்க்கு உரித்துடையவராதல் வேண்டும்.

3.4 ஒவ்வொரு வகாலா கொடுக்கல் வாங்கலின் நாணயமும் முனைவிலுள்ள இரு திறத்தவர்களினாலும் உடன்பட்டுக்கொள்ளப்பட்டவாறு இருத்தல் வேண்டும்.

3.5 ஏற்றுக்கொள்ளலில் முவாக்கிலினால் வக்கீலுக்கு வேறுவகையில் அறிவுறுத்தப்பட்டிருந்தாலன்றி அத்தகைய புதுப்பித்தல் காலத்தின்போது இருக்கும் அதே நியதிகள் மற்றும் நிபந்தனைகளின் அடிப்படையில் வகாலா கொடுக்கல் வாங்கல் தன்னியக்க ரீதியாகப் புதுப்பிக்கப்படுதல் வேண்டும். ஏற்றுக்கொள்ளலில் கையொப்பமிடும் தேதியில் முவாக்கில் புதுப்பிக்கப்பட்ட வகாலா கொடுக்கல் வாங்கலின் அடையப்பட்ட மற்றும் ஒதுக்கப்பட்ட எதிர்நோக்கப்பட்ட இலாபத்தை சேர்ப்பதற்கு தெரிவு செய்யலாம்.

## 4. ஆளும் சட்டமும் நியாயாதிக்கமும்

4.1 இவ்வுடன்படிக்கையானது இலங்கைச் சட்டங்களுக்கு இணங்க எல்லா வகையிலும் ஆளப்படுதல் வேண்டும்.

4.2 இதற்கான திறத்தவர்கள் இவ்வுடன்படிக்கையிலிருந்து எழுகின்ற எவையேனும் வழக்கு நடவடிக்கைகளின் நோக்கத்திற்காக அல்லது அவை தொடர்பாக இலங்கை நீதிமன்றங்களின் பிரத்தியேக நியாயாதிக்கத்திற்குள் இத்தால் சமர்ப்பிக்கிறார்கள்.

## 5. முடிவுறுத்தல்

5.1 இவ்வுடன்படிக்கை ஆனது இரு திறத்தவர்களாலும் அதனது நிறைவேற்றுத் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் என்பதுடன் முடிவுறுத்தல் குறித்து எந்தவொரு திறத்தவராலும் மற்றைய திறத்தவருக்கு முப்பது நாட்களுக்குக் குறையாமல் எழுத்திலான முடிவுறுத்தல் அறிவித்தலை அனுப்பாவிட்டால் இரு திறத்தவரும் சேவையை முடிவுறுத்தும்வரை தொடருதல் வேண்டும்.

5.2 வக்கீல் தனது தற்றுணிபின்பேரில் வகாலா தொகையினை முதிர்ச்சி உறுவதற்கு முன் மீளப்பெற அனுமதிக்கலாம். ஆயினும் அத்தகைய அறிவுத்தல்கள் முவாக்கிலினால் வழங்கப்படுகின்றது என்பதுடன் அத்தகைய அனைத்து முதிர்ச்சி உறுவதற்கு முன் மீளப்பெறுதல்கள் மற்றும் எதிர்நோக்கப்பட்ட இலாபத்தை உள்ளடக்குகின்றதான தொடர்புடைய இணைந்த இலாபம் என்பன தகாருஜ் கோட்பாட்டின் அடிப்படையில் பரஸ்பர உடன்படிக்கையினால் தீர்மானிக்கப்படும்.

இதற்குச் சாட்சியாக, இதற்கான திறத்தவர்கள்இதனகத்துப்பின்னர் குறிப்பிடப்பட்ட முறையில் அந்தந்த இடங்களிலும் கீழே குறித்துரைக்கப்பட்ட தேதிகளிலும் உடன்படிக்கையை நகல்களில் நிறைவேற்றப்படச் செய்வித்துள்ளனர்.

**அதிகாரமளிக்கப்பட்ட கையொப்பதாரர்கள்**
பெயர்: EPF:
திகதி:

**அதிகாரமளிக்கப்பட்ட கையொப்பதாரர்கள்**
பெயர்: EPF:
திகதி:

**சாட்சிகள்**

1.

2.